DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.39/2023**
**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.16 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 16 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | தங்கராஜ் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | பழனிச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 59/2025 |
| சாதி | - | | | | |

**25-08-2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் செட்டிப்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2023-ம் தேதி காலை 07.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது சின்கோனா 1-வது டிவிசனை சேர்ந்த முருகன் என்பவர் மகன் நந்தக்குமார் (வயது 23/2023) என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.10/2023 சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இ.த.ச-வின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. ( **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக நிலைய காவல் ஆய்வாளர் திருமதி. கற்பகம் அவர்கள் பார்வைக்கு சமர்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபர் 19.01.2023-ம் தேதி இரவு 07.45 மணிக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் இறந்ததாக உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து தகவல் பெறப்பட்டதா என்றால் பெறப்பட்டது. தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 20.01.2023-ம் தேதி காலை 07.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.